(6) அறிக்கை அளித்தல்.

துணை வினாவிற்கு அளித்த விடைக்கான திருத்தம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து 11—2—1982ஆம் தேதியன்று 141ஆம் எண் வினாவின் எழுப்பப் பெற்ற துணை வினாவிற்கு அளிக்கப்பட்ட விடைக்கு மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் சட்டப் பேரவை விதி 107(—)இன்கீழ் திருத்த அறிக்கை ஒன்றை அளிப்பார்கள்.

(முற்பகல் 10.50)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 11—2—1982 ஆம் நாள் சட்டமன்ற வினா எண் புதியது 141; பழைய எண் 11150க்குப் பதில் அளிக்கையில் திரு. செ. செம்மலை அவர்கள் எழுப்பிய துணை வினாவிற்கு நான் கீழ்க்கண்டவாறு பதிலளித்தேன். '' தலைவர் அவர்களே, கேரள அரசு அப்படிச் சொல்லியதாக எனக்கு ஒன்றும் தகவல் இல்லை. கேரள அரசோடு போட்ட ஒப்பந்தம் பிப்ரவரி 11ஆம் தேதி—11—2—1982—அதாவது இன்றோடு முடிகிறது என்று கருதுகிறேன். ஆனாலும் அந்த மாநிலம் உபரி மாநிலமாக இருப்பதால் தொடர்ந்து அவர்கள் தருவார்கள் என்று கருதுகிறேன். ஆகவே மீண்டும் ஒப்பந்தத்தைப் புதிப்பிப்பதற்கு பேச்சு வார்த்தைகள் நடத்தப்படும் ''. மேற்கூறியதற்குப்பதிலாகசீழ்க்கண்டவாறு என்னுடைய பதிலைத் திருத்திக் கொள்ள விழைகிறேன் :

'' தலைவர் அவர்களே, கேரள அரசு அப்படிச் சொல்லியதாக எனக்கு ஒன்றும் தகவல் இல்லை. கேரள அரசோடு போட்ட ஒப்பந்தம் 11—2—1983ஆம் தேதியன்று முடிகிறது. ஆனால் இரண்டு மாநிலங்களும் விருப்பப்பட்டால் 2 ஆண்டுகளுக்கு அதாவது 11—2—1982க்குப் பின்னர் மின் கட்டணத்தைப் பொறுத்தமட்டில் மறுபரிசீலனை செய்யலாம். ஆனாலும் அந்த மாநிலம் உபரி மாநிலமாக இருப்பதால் தொடர்ந்து மின்சாரம் தருவார்கள் என்று கருதுகிறேன். ஒப்பந்தம் முடிவுறும் தருணத்தில் ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க பேச்சுவார்த்கைள் நடத்தப்பெறும்